




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








மலர்:03 | இதழ்:234 | 4 பக்கங்கள் | 23:03:2026 | திங்கட்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825




**நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.**

**விளக்கம்:**
ஒருவன்மாட்டுக் கொள்ளல் நன்மை பயக்கும் நெறியெனினும் கோடல் தீது: ஒருவர்க்குக் கொடுத்தாற் பாவ முண்டெனினும் கொடுத்தல் நன்று. கொள்வோ ரமைதி யறிந்து கொடுக்கவேண்டுமெனினும் இது வரையாது கொடுத்தலாதலால் யாதொருவாற்றானுங் கொடை நன்றென்பது கூறிற்று.

## எரிபொருள், உரம் விநியோகம் குறித்து பிரதமர் மோடி தீவிர ஆலோசனை



புதுடெல்லி: அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நிலவி வரும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும்உரவிநியோகத்தின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஆலோசனை நடத்தினார்.

தலைநகர் டெல்லியில் உள்ள பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் தீவிரமடைந்துள்ள சூழலில், கச்சா எண்ணெய், எரிபொருள் மற்றும் உரங்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வது குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. உலகளாவிய பொருளாதாரம், எரிசக்தி ஆதாரத்தில் ஸ்திரமின்மை நிலவினாலும், உள்நாட்டு நுகர்வோர் மற்றும் தொழில் துறையினரின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக பிரதமர் உறுதியளித்தார்.

கடல்வழிப் போக்குவரத்து குறித்த விளக்கத்தின் போது, பாரசீக வளைகுடா பகுதியில் உள்ள 22 இந்தியக் கப்பல்களும், அவற்றில் பணியாற்றும் 611 இந்திய மாலுமிகளும் பாதுகாப்பாக இருப்பதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளர் ராஜேஷ் குமார் சின்கா தெரிவித்தார். கடந்த 24 மணி நேரத்தில் எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்றும், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு எல்பிஜி சிலிண்டர் விநியோகம் சீராக உள்ளதாகவும், பொதுமக்கள் அச்சத்தின் காரணமாக முன்கூட்டியே முன்பதிவு செய்வது குறைந்துள்ளதாகவும் இந்த கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது. மேலும், கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு வணிக ரீதியிலான சிலிண்டர் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்க மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கள்ளச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது மாநில அரசுகள் அதிரடி சோதனைகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## டெக்சாஸில் இருந்து 47,000 டன் காஸ் இந்தியா வந்தது; ரஷ்யாவில் இருந்து 7 கப்பல்களில் கச்சா எண்ணெய் வருகிறது




புதுடெல்லி: அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூருக்கு வந்து சேர்ந்தது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரால் இந்தியாவில் சமையல் காஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இது குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பிறகு ஈரான் ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் ஷிவாலிக் கப்பல், நந்தா தேவி கப்பல், ஜக் லட்கி கப்பல்களில் கச்சா எண்ணெய் இந்தியா வந்தடைந்தன.

இதற்கிடையில் வளைகுடா நாடுகளின் கச்சா எண்ணெய், சமையல் காஸ் (எல்பிஜி) போக்குவரத்து முடங்கியதால் அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து 22 லட்சம் டன் எல்பிஜியை கொள்முதல் செய்ய இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உள்ளன.

இதன்படி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த பைக்ஸிஸ் பயோனீர் கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூரை வந்தடைந்தது. மங்களூருவில் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி சேமிப்பு கிடங்குகள் உள்ளன. அங்கிருந்து கர்நாடகா, தமிழகம், தெலங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெட்ரோல், டீசல், எல்பிஜி காஸ் விநியோகம் செய்யப்படுகிறது.

மங்களூரு துறைமுகத்துக்கு அடுத்தடுத்து சமையல் காஸ் கப்பல்கள் வருவதால் தென் மாநிலங்களில் எல்பிஜி விநியோகம் அதிகரிக்கும் என்று பொதுத்துறை எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் சீனாவுக்கு சென்று கொண்டிருந்த ரஷ்யாவின் 7 கச்சா எண்ணெய் கப்பல்கள் இந்தியாவுக்கு திருப்பி விடப்பட்டிருக்கின்றன. இதில் அகுவா டைட்டன் என்ற கப்பல் சுமார் ஒரு லட்சம் டன் கச்சா எண்ணெயுடன் நேற்று முன்தினம் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது. ரஷ்யாவின் 6 கச்சா எண்ணெய் கப்பல்களும் அடுத்தடுத்து இந்திய துறைமுகங்களை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மார்க்சிஸ்ட்டுக்கு 5 தொகுதிதான் முதல்வர் ஸ்டாலின் உறுதி




திமுக - மார்க்சிஸ்ட் தொகுதிப் பங்கீட்டில் இழுபறி நீடிக்கும் நிலையில், 5 தொகுதிகளை பெற்றுக்கொள்ளுமாறு முதல்வர் வைத்த வேண்டுகோளை பரிசீலிப்போம் என மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார். திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகளை ஒதுக்க திமுக முன் வந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் கூடியது. இரவு வரை நீடித்த இக்கூட்டத்தில் திமுகவிடம் கடந்த முறை போட்டியிட்ட 6 தொகுதிகளையாவது கேட்டு பெறுவது என முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் அண்ணா அறிவாலயத்தில் திமுகவுடனான 4-ம் கட்ட பேச்சுவார்த்தைக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குழு நேற்று சென்றது. பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த முறையும் உடன்பாடு ஏற்படாமல் பேச்சுவார்த்தை முடிவுற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம் கூறியதாவது: கூட்டணியில் புதிதாக கட்சிகள் இணைந்திருப்பதால் தொகுதிகளை ஒதுக்கீடு செய்வதில் இருக்கக்கூடிய சிரமங்களை முதல்வர் எங்களிடத்தில் பகிர்ந்து கொண்டார். அதனால் 5 தொகுதிகளை ஏற்று ஒத்துழைப்பு தருமாறு முதல்வர் கேட்டுக்கொண்டார். ஆனால் 6 தொகுதிகளுக்கு தான் கட்சியின் மாநிலக் குழு ஒப்புதல் தருவதற்கு அனுமதி அளித்திருந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த கூட்டணியில் நீடிக்க விரும்புகிறோம். கடந்தமுறை எங்களது பலம் இருக்கும் மாவட்டங்களில், எங்களுக்கான தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படி கிடைத்திருந்தால் 6 தொகுதிகளிலும் வெற்றிபெற்றிருப்போம். எனவே, முதல்வரின் வேண்டுகோளை கட்சியின் மாநிலக் குழு கூட்டத்தை கூட்டி பரிசீலித்து முடிவு செய்வோம். எத்தனை தொகுதிகள் கொடுப்பார்கள், அதற்கேற்ப கூட்டணியில் நீடிப்பதா? வேண்டாமா? என்பதை பற்றி யோசிக்கும் கட்சி மார்க்சிஸ்ட் அல்ல. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இருந்துதான் 2026 சட்டப்பேரவை தேர்தலை சந்திப்போம். உடன்பாடு ஏற்பட்ட பிறகு சென்னை உட்பட எங்களுக்கு விருப்பமான தொகுதிகள் அடங்கிய விருப்பப்பட்டியலை திமுகவிடம் வழங்குவோம். இவ்வாறு அவர் கூறினார். இதையடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம், தி.நகரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று (மார்ச் 23) கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முடிவு செய்யப்பட்டு, திமுகவுடனான பேச்சுவார்த்தையில் மார்க்சிஸ்ட் கட்சிக்கான தொகுதிகள் இன்று இறுதிசெய்யப்படும் என கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா நகரில் நடைபெற்றது.



இந்தக் கூட்டம் மாநில கட்டுப்பாட்டுக் குழு தலைவர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையிலும், தேசிய செயலாளரும் மாநில பொருளாளருமான திரு. ஸ்ரீவை சுரேஷ் தேவர் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.சிறப்பு அழைப்பாளராக கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் காம்ரேட் திரு. தேவராஜன் கலந்து கொண்டார். மேலும் கட்சியின் மத்திய, மாநில குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.அகில இந்திய பொதுச்செயலாளர் முன்னிலையில் மேனாள் வருமான வரித்துறை அதிகாரி திரு. சரவணகுமார் (IRS) அவர்கள் மற்றும் தொழில் அதிபர்களும் சமூக சேவகர்களுமான சூளைமேடு திரு. கனகு (எ) கனகராஜ் அவர்களும் கொளத்தூர் திரு. சந்துரு அவர்களும் நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் உலகத்தலைவர் நேதாஜி மற்றும் தேசியத்தலைவர் பசும்பொன் தேவரின் சமூக நீதி கொள்கையை ஏற்று கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர்.அப்போது அவர்கள் கூறுகையில் இனி முழுமையாக அரசியல் பாதையில் பயணிப்போம் என்றும் கட்சியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் முழுமூச்சாக கட்சிப்பணியும் மக்கள் பணியும் செய்வோம் என்று உறுதி அளித்தார்கள்.



திமுக மாநில மகளிர் அணி செயலாளருமான கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் 20'க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். மேலும் இந்நிகழ்வில், தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் தலைமையில், ஏற்கனவே கழகத்தில் இணைந்த குகன் மற்றும் லோகேஷ் ஏற்பாட்டில், மனிதவள மேலாண்மை துறை அமைச்சர்& இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் சன் பாலு, தளவாய்பட்டினம் ஊராட்சி செயலாளர் கணேஷ், திருமலை பாளையம் பிரதிநிதி செல்வராஜ், அமைப்பாளர் கனகராஜ், து. அமைப்பாளர் கோபிநாத் பங்கேற்றனர்.




சென்னை மெரினா கடற்கரையில் உலக தண்ணீர் தினத்தில் மாற்றம் அமைப்பின் சார்பில் நெகிழி பயன்படுத்துவதை தவிர்த்து மக்கும் வகையிலான பைகளை பயன்படுத்தி கடல் நீரை சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக பொதுமக்களுக்கு மக்கும் வகையிலான பைகள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது உலகின் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் தண்ணீர் மிக முக்கியம் பூமி பந்து நிலபரப்பை விட அதிகம் கடல் நீரால் சூழ்ந்துள்ளது உலகம் முழுவதும் உள்ள கடல்நீரில் பல கடல்வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றனர் நாகரிகம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியடைந்துள்ள நிலையில் கடல் பயணம் மற்றும் கடற்கரை பகுதிகளில் பொழுது போக்கு மற்றும் சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளும் மனிதர்கள் கடற்கரை பகுதியில் நெகிழி பைகள் நெகிழி பாட்டில்களை மற்றும் பல நெகிழி பொருட்களை பயன்படுத்தி கடல் நீரிலும் கடற்கரையிலும் வீசி செல்லுங்கின்றனர் இதனால் அந்த நெகிழி பொருட்கள் மக்காமல் கடல் நீர் கடற்கரை பகுதிகள் மாசடைவதுடன் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர் இதனை தவிர்க்கும் விதத்திலும் பொதுமக்களுக்கு சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்திலும் சென்னை மெரினா கடற்கரையில் மாற்றம் அமைப்பினர் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு இது குறித்து எடுத்து கூறி நெகிழி பைகளை பெற்று கொண்டு மக்கும் வகையிலான பைகளை வழங்கி விழிப்புணர்வு செய்தனர் இந்நிகழ்வில் மாற்றம் அமைப்பின் நிறுவனர் தலைவரும் தேசிய மாநில விருதுகளை வென்ற நடிகரும் இயக்குனருமான ஆர்.ஏ.தாமஸ் வழக்கறிஞர் கலைசெல்வன் வழக்கறிஞர் ஜான் பேராசிரியர் பிரிட்டோ மாணவர்கள் லோகேஷ் கிருஷ்ணா முகமது ஷபி மணிகண்டன் அலெக்ஸ் பாண்டியன் நிகோலஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்தனர்

## பிரேமலதா தலைமையில் தேமுதிக மாவட்ட செயலாளர்கள் இன்று ஆலோசனை



தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடக்கிறது. இதில் தொகுதிப் பங்கீடு, எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடலாம் என்பது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.இது தொடர்பாக தேமுதிக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், 'தேமுதிக, மாவட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் வரும் 23-ம் தேதி (இன்று) காலை 10 மணியளவில் சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து மாவட்ட செயலாளர்களும் தவறாமல் இந்த முக்கிய ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் இன்று தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது.திமுக கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியானது. கூட்டணியில் உள்ள எல்லா கட்சிகளுக்கும் இடங்களை பகிர்ந்து கொடுக்க வேண்டியிருப்பதால் தொகுதிகளை குறைத்துக் கொள்ளச் சொல்லி கூட்டணிக் கட்சிகளை திமுக கோரி வருகிறது. தேமுதிகவிடமும் ஒரு தொகுதியை குறைத்துக் கொண்டு 9 தொகுதிகளை பெற்றுக் கொள்ளுமாறு திமுக கோரியதாக செய்திகள் வெளியானது.இந்நிலையில்,



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ஆணையாளர் அர்பித் ஜெயின் உத்திரவின் பேரில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" என்பதை குறித்து கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நேதாஜி காய்கறி மார்க்கெட் வளாகம் மற்றும் நடைபயிற்சி வளாகத்திற்கு வரும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம், செல்பி தேர்தல் விழிப்புணர்வு, ரப்பர் ஸ்டாம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்வு கிழக்கு சட்டமன்ற தொகுதியின் தேர்தல் விழிப்புணர்வு அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் மூலம் சிறப்பாக நடத்தப்பட்டது.




வேலூர் மாவட்ட தேமுதிக பொருளாளரும், காட்பாடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான செந்தில்குமார், தலைமையில் நேற்று (22.03.2026) தேமுதிகவைச் சார்ந்த மாவட்ட, மாநகர, தொகுதி பல்வேறு நிர்வாகிகள் மற்றும் பகுதி, வட்டக் கழக செயலாளர்கள் வேலூர் மாநகரின் துணை மேயரும், காட்பாடி தெற்குப் பகுதியின் செயலாளருமான M.சுனில் குமார், அவர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப்பெற்ற அனைவரையும் தோழமையுடன் சால்வை அணிவித்து அன்போடு வேலூர் மாநகர துணை மேயர் வரவேற்றார்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" குறித்துநடைபெற்றவாக்காளர்களுக்கானவிழிப்புணர்வுநிகழ்ச்சியில்பேருந்துநிலையத்தில் பேருந்து ஓட்டுநர், நடத்துனர் மற்றும் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



புதுச்சேரி மாநிலம், லாஸ்பேட்டை தொகுதியிலிருந்து பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி வெங்கடாஜலபதி தலைமையில், பாரதிய ஜனதா கட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அசோக்பாபு, முன்னிலையில் பாஜகவில் இணைந்தனர்.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே மனைவியை வெட்டிக்கொன்ற கணவன்

திருவெண்ணெய்நல்லூர், மார்ச். 23



திருவெண்ணெய்நல்லூர் அருகே சின்னசெவலை கிராமத்தை சேர்ந்த ராஜவேல் மகள் ரேணுகா (36) இவருக்கும் அதே கிராமத்தைச் சேர்ந்த கலியபிள்ளை மகன் கோவிந்தன் (42) டிரைவர் என்பவருக்கும் கடந்த 22 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்று மூன்று மகன்கள் உள்ளனர். இந்நிலையில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்து வந்த கோவிந்தன் ரேணுகா மீது சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். இதனால் மனம் உடைந்த ரேணுகா கடந்த சில தினங்களுக்கு முன்பு திருவெண்ணெ ய்நல்லூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்து கோவிந்தனுடன் வாழ்வதற்கு விருப்பமில்லை எனக்கூறி, அதே கிராமத்தில் உள்ள அவரது அம்மா வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் ரேணுகா நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8.40 மணி அளவில் வீட்டிற்கு அருகே உள்ள முள் தோப்பிற்கு இயற்கை உபாதைகள் கழிக்க சென்ற போது அங்கு மறைந்திருந்த கோவிந்தன் கையில் வைத்திருந்த கத்தியால் ரேணுகாவின் தலையில் சரமாரியாக வெட்டி உள்ளார். இதில் படுகாயம் அடைந்த ரேணுகா ரத்த வெள்ளத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார். அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு அளித்த தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு விரைந்த ஆய்வாளர் அழகிரி மற்றும் போலீசார் ரேணுகாவை மீட்டு திருவெண்ணெ ய்நல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் ரேணுகா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்ததன் பேரில் ரேணுகாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்த புகாரின் பேரில் திருவெ ண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளர் அழகிரி மற்றும் போலீசார் தலை மறைவான கோவிந்தனை வலைவீசி தேடி வருகின்றனர்.

# ஹோர்முஸ் நீரிணை பகுதி பாதுகாப்புக்கு பிற நாடுகளும் போர் கப்பல்களை அனுப்ப வேண்டும்

## ட்ரம்ப் வலியுறுத்தல்



ஹோர்முஸ் நீரிணை பகுதி பாதுகாப்புக்கு பிற நாடுகளும் போர் கப்பல்களை அனுப்ப வேண்டும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார். அணுஆயுத தயாரிப்பு, ஏவுகணை உற்பத்தியை கைவிட வேண்டும் என ஈரானை தொடர்ந்து அமெரிக்கா வலியுறுத்தி வந்தது. மேலும், ஈரானுக்கு நெருக்கடி அளிக்கும் வகையில் பல்வேறு பொருளாதார தடைகளை தனது நட்பு நாடுகளுடன் சேர்ந்து விதித்து வந்தது. எனினும், அமெரிக்காவின் நெருக்கடிக்கு ஈரான் பணியவில்லை.

இதைத் தொடர்ந்து, கடந்த பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதியன்று ஈரான் மீது இஸ்ரேல் அமெரிக்கா கூட்டு தாக்குதலை தொடங்கியது. இதில் முதல் நாளிலேயே ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி, படைத் தளபதிகள், முன்னாள் அதிபர் உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, பதிலுக்கு இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகளிலுள்ள அமெரிக்க நிலைகள் மீதும் ஈரான் ஏவுகணைகளை வீசியும், டிரோன்களை செலுத்தியும் தாக்கி வருகிறது. இதனால் மத்திய கிழக்கு ஆசியாவில் கடந்த 2 வாரங்களாக பதற்றம் நிலவுகிறது.

உலகின் 20 சதவீத கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்து, ஈரான்ஓமன் இடையேயான ஹோர்முஸ் நீரிணை வழியே தான் நடைபெறுகிறது. இஸ்ரேல் அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக அந்த நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்தது. இதையடுத்து ஈரானின் தாக்குதல் அச்சத்தால் அவ்வழியே கச்சா எண்ணெய் கப்பல்கள் செல்வதில் சிக்கல் நிலவுகிறது.

இதன் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை பலமடங்கு அதிகரித்துள்ளது. உலகின் பல நாடுகளில் பெட்ரோல்டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில்,

உலகில் உள்ள பிற நாடுகளும்ஹோர்முஸ்நீரிணை பகுதிபாதுகாப்புக்குபோர் கப்பல்களை அனுப்ப வேண்டும் என டிரம்ப் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'சீனா, பிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா, பிரிட்டன் மற்றும் பிற நாடுகள் ஹோர்முஸ் நீரிணை பகுதிக்கு போர் கப்பல்களை அனுப்பும் என நம்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் கருத்து: டிரம்பின் அழைப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரிட்டன் நாடு, கப்பல் போக்குவரத்து பாதுகாப்புக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து கூட்டணிநாடுகளுடன்ஆலோசித்து வருவதாக தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், டிரம்பின் அழைப்பை ஈரான் விமர்சித்துள்ளது. இதுகுறித்து ஈரானின் வெளியுறவுத் துறை அமைச்சர் அரகாச்சி கூறுகையில், 'அண்டை நாடுகள் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை தங்கள் நாடுகளில் இருந்து வெளியேற்ற வேண்டும். டிரம்ப் பிற நாடுகளிடம் கெஞ்சி கொண்டிருக்கிறார்' என தெரிவித்தார்.

அமெரிக்க அனுமதி மறுப்பு: இந்நிலையில், விமானங்களுக்கு போரில் நடுநிலை வகித்து வரும் ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து வான் பகுதி மீது பறக்க 2 அமெரிக்க போர் விமானங்களுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆனால் அந்நாட்டு அரசு, அந்த போர் விமானங்கள் தங்கள்வான்பகுதிவழியே பறக்க அனுமதி மறுத்து விட்டது.



தஞ்சாவூர் மாவட்டம் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா என்னும் அனைவரும் நேர்மையாக 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு சைக்கிள் பேரணியினை வருவாய் கோட்டாட்சியர் நித்யா நேற்று (22.03.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் சௌமியா, வட்டாட்சியர் சிவக்குமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் சோமசுந்தரம், எஸ்.காயத்திரி மற்றும் பலர் உடன் உள்ளனர்.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதையொட்டி, வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) விஜயகுமாரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சேலம் மாவட்டத்தில் 85 வயது நிறைவடைந்த மூத்த குடிமக்கள் குறைந்த பட்சம் 40% இயலாமை உள்ள

# மாற்றுத்திறனாளிகள், கோவிட்19னால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டிலிருந்தபடி தபால் மூலமாக வாக்களிக்கலாம்!



சேலம், மார்ச் 23

சேலம் மாவட்டத்தில் 85 வயது நிறைவடைந்த மூத்த குடிமக்கள், குறைந்தபட்சம் 40 சதவீதம் இயலாமை உள்ள மாற்றுத்திறனாளிகள், கோவிட்19 னால் பாதிக்கப்பட்ட வர்கள் வீட்டிலிருந்தபடி தபால் மூலமாக வாக்களிக்கலாம். இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தா தேவி, தெரிவித்துள்ளதாவது:

இந்திய தேர்தல் ஆணையம்,தமிழ்நாடுசட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 க்கான அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளது. வாக்குப்பதிவு 23.04.2026 அன்று நடைபெற உள்ளது. சட்டமன்ற பொதுத்தேர்தலில் அனைத்து தரப்பினரும் விடுபடாமல் தங்களது ஜனநாயக கடமையாற்றி தங்களது வாக்குகளை செலுத்திடவும், தேர்தல் அறிவிப்பு வெளியான நாள் முதல் படிவம் 12D மூலம் கீழ்க்கண்ட வாக்காளர்களை, வாக்குச்சாவடிகளுக்கு வருவதிலிருந்து விலக்களி த்துள்ளது.

85வயது நிறைவடைந்த மூத்த குடிமக்கள் (Absentee Voters on Senior Citizense) (AVSC), குறைந்தபட்சம் 40 சதவீதம்இயலாமைஉள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள், (Absentee Voters on Persons with Disability) (AVPD), கோவிட் 19 னால் பாதிக்கப்பட்டவர்கள் Absentee Voters on Covid19 suspect or affected persons (AVCO) அதன்படி, இவ்வசதியினை பெறுவதற்காக 12D என்ற படிவத்தில் மேற்படி வாக்காளர்கள் தங்களது விருப்பத்தை தெரிவிக்க வேண்டும்.

மேற்படி12Dபடிவத்தை தங்கள் பகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO) வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கப்பட்டு வருகிறது. வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிக்கு நேரில் வந்து வாக்களிக்க இயலாத 85 வயது நிறைவடைந்த மூத்த குடிமக்கள் (Absentee Voters on Senior Citizense) (AVSC),

குறைந்தபட்சம் 40 சதவீதம் இயலாமை உள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள், (Absentee Voters on Persons with Disability) (AVPD) ஆகிய அனைவரும் மேற்படி 12D படிவத்தை பூர்த்தி செய்து 03.04.2026க்குள் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வழங்க வேண்டும்.

மூத்த குடிமக்கள் (AVSC) 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர் பெயர் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே படிவம் 12D உடன் வேறு எந்த கூடுதல் சான்றிதலோ அல்லதுஉறுதிமொழியோ கொடுக்க தேவையில்லை. மாற்றுத்திற னாளிகள் (AVPD) என குறிப்பிடப்பட்ட ஒரு வாக்காளர், பிரிவு 2ன் கீழ், சான்றளிக்கும் அதிகாரியால் சான்றளிக்கப்பட்டபடி (குறிப்பிட்ட இயலாமை 40 சதவீதத்திற்கும் குறையாமல்) உள்ள ஒருவர், மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016ன்படி தபால் வாக்கு பெறுவதற்கு விண்ணப்பி ப்பதற்கு தகுதியுடையவர்கள்.

இந்த பிரிவைச் சேர்ந்த வாக்காளர் ஒருவர் படிவம் 12Dயில் தனது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, அதற்கு ஆதாரமாக மாற்றுத்திறனாளி அடையாள அட்டை நகலை 12D படிவத்துடன் இணைக்க வேண்டும்.

கோவிட்19 சந்தேகிக்கப்படும் அல்லது பாதிக்கப்பட்ட நபர்கள் (AVCO) கோவிட்19 காரணமாக தேர்தல் நேரத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒரு வாக்காளர், மாநிலத்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் அல்லது கோவிட்19 காரணமாக வீட்டில்/ நிறுவனத்தில் தனிமைப்படுத்தலில் இருப்பவர் மற்றும் மருத்துவ ஆலோசனையின் படி வாக்குச்சாவடியில் தனிப்பட்ட முறையில் வாக்களிக்க இயலாத நிலையில் உள்ள வாக்காளர்கள் அஞ்சல் வாக்குச்சீட்டை வழங்கக் கோரினால், அத்தகைய வாக்காளர்கள் மாநிலத்தில் உள்ள மருத்துவமனையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு கோவிட்19 பாதிக்கப்பட்டிருப்பதைக் காட்டும் தகுதி வாய்ந்த சுகாதார அதிகாரிகளின் சான்றிதழ் நகலை வைத்திருக்க வேண்டும் அல்லது கோவிட் 19 காரணமாக மாநிலத்திற்குள் (வீடு அல்லது நிறுவனம்) தனிமைப்படுத்தியிருக்க வேண்டும். மேற்கண்டவாறு வீட்டிலேயே இருந்து வாக்களிக்க விருப்பம் தெரிவித்தவர்களின் வீட்டிற்கு இரண்டு வாக்குச்சாவடி அலுவலர்கள், ஒரு வீடியோகிராபர், நுண்பார்வையாளர்கள் மற்றும் ஒரு பாதுகாவலர் அடங்கிய வாக்குப்பதிவு குழுவானது சென்று, இறுதி செய்யப்பட்ட வேட்பாளர்களின் முகவர்களின் முன்னிலையில் வாக்காளரை தபால் வாக்குச்சீட்டில் வாக்களிக்கச் செய்யும்.

மேற்படி வாக்குப்பதிவின் இரகசியம் காக்கப்படும். மேற்படி வாக்குப்பதிவு குழு வருகை தரும் தேதி மற்றும் தோராயமான நேரம் குறித்து படிவம் 12D விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண்ணில் குறுஞ்செய்தி, தபால் அல்லது வாக்கு ச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) மூலமாக வாக்காளர்களுக்கு முன்னரே தெரிவிக்கப்படும். முதல் வருகையின் போது கொடுக்கப்பட்ட முகவரியில் வாக்காளர் இல்லையெனில், வாக்குச் சேகரிக்கும் குழுவானது அவர்களின் இரண்டாவது வருகையின் தேதி மற்றும் நேரத்தை அறிவிப்பார்கள். இரண்டாவது வருகையின் போதும் வாக்காளர் வீட்டில் இல்லையெனில், மேற்கொண்டு மறுவருகையோ அல்லது நடவடிக்கையோ எடுக்கப்படமாட்டாது.

தபால் ஓட்டு மூலம் வீட்டில் வாக்களிக்கும் வசதியை விருப்பத்தின்பேரில் தேர்வு செய்யும் வாக்காளர்கள், வாக்குப்பதிவு நாளில் நேரடியாக வாக்குச்சாவடியில், வாக்களிக்க இயலாது. மேலும், வாக்குப்பதிவு குழுவின் இரண்டாவது வருகையின் போதும் வீட்டில் இருக்க தவறிய வாக்காளர்களுக்கு தபால் வாக்குச்சீட்டு (Postal Ballot) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) ஆகிய இரண்டிலும் வாக்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும். மேலும் மேற்படி வசதியைப் பெறுவதில் தகவல் ஏதேனும் தேவைப்படின் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 18004257020 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் வட்டாட்சியர் அலுவலகத்தில், அமைக்கப்பட்டுள்ள கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையை மாவட்ட தேர்தல் மாவட்ட ஆட்சித் தலைவர், நேற்று (22.03.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கே.வி. குப்பம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சரவணன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பலராமன் ஆகியோர் உள்ளார்கள்.

சென்னை மெரினா கடற்கரையில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு

# பொதுமக்களுக்கு மக்கும் வகையிலான பைகள் வழங்கி விழிப்புணர்வு



சென்னை, மார்ச் 23

உலகின் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் தண்ணீர் மிக முக்கியம். பூமி பந்து நிலபரப்பை விட அதிகமாக கடல் நீரால் சூழ்ந்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள கடல்நீரில் பல கடல்வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றது. நாகரிகம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியடைந்துள்ள நிலையில் கடல் பயணம் மற்றும் கடற்கரை பகுதிகளில் பொழுது போக்கு மற்றும் சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளும் மனிதர்கள் கடற்கரை பகுதியில் நெகிழி பைகள், நெகிழி பாட்டில்களை மற்றும் பல நெகிழி பொருட்களை பயன்படுத்தி கடல் நீரிலும் கடற்கரையிலும் வீசி செல்லுகின்றனர்.

இதனால் அந்த நெகிழி பொருட்கள் மக்காமல் கடல் நீர் கடற்கரை பகுதிகள் மாசடைவதுடன் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றது. இதனை தவிர்க்கும் விதத்திலும் பொது மக்களுக்கு சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்திலும் சென்னை மெரினா கடற்கரையில் மாற்றம் அமைப்பினர் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு இது குறித்து எடுத்துக் கூறி நெகிழி பைகளை பெற்றுக் கொண்டு மக்கும் வகையிலான பைகளை வழங்கி விழிப்புணர்வு செய்தனர்.

இந்நிகழ்வில் மாற்றம் அமைப்பின் நிறுவனத் தலைவரும், தேசிய மாநிலவிருதுகளைபெற்ற நடிகரும்இயக்குனருமான ஆர்.ஏ.தாமஸ், வழக்கறிஞர்கள் கலைச்செல்வன், ஜான், பேராசிரியர் பிரிட்டோ, மாணவர்கள் லோகேஷ், கிருஷ்ணா, முகமது ஷபி, மணிகண்டன், அலெக்ஸ் பாண்டியன், நிகோலஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்தனர்.

# தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி பேரவை கூட்டம்



தருமபுரி, மார்ச். 23

தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பென்னாகரம் சட்டமன்ற தொகுதி பேரவைக் கூட்டம் பென்னாகரம் UCPI அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி. இரவி தலைமையில் நடைபெற்றது.

இதில் 2026 ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் குறித்து கட்சியின் மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் பேசினார். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஜி. மாதையன், மாவட்ட நிர்வாக க்குழு உறுப்பினர் ஜி. சம்பத்,பென்னாகரம்தொகுதி பொறுப்பாளர் எம்.அழகேசன், முனியப்பன், சங்கர், முருகேசன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவது குறித்தான கருத்தினை மாவட்ட குழுவிற்கு தெரிவிப்பது என்றும் இறுதி முடிவை மாவட்ட மையம் எடுக்கும்.பென்னா கரம் சட்டமன்ற தொகுதியில் குறிப்பாக ஏரியூர் பகுதியில் கடும் குடிநீர் பற்றாகுறை இருப்பதினை உடனே போக்க வேண்டும். பென்னாகரம் தொகுதியில் வன விலங்கான யானை, காட்டு பன்றி,. மயில், குரங்குகள் வேளாண்மை நிலத்தில் புகுந்து பயிர் சாகுபடிகளை நாசம் செய்வதை தடுக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பென்னாகரம் தொகுதியில் கல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது வழங்கிய உவழங்கிதையும் சுற்று சூழல் நலன் கருதி ரத்து செய்ய வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# குன்னம் தொகுதியின் நாடாளும் மக்கள் கட்சியின் வேட்பாளர் அறிவிப்பு

பெரம்பலூர், மார்ச். 23

தமிழகத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறுகிறது. அரசியல் கட்சிகள் தங்களது கட்சி சார்பில் வேட்பாளர்களை தேர்வு செய்து வருகிறார்கள். அந்த வகையில், நாடாளும் மக்கள் கட்சியின் மாநில தலைவர் ஜெ. அக்னி செல்வராஜ், அவர் கட்சி சார்பில் வேட்பாளர்களை அறிவித்து வருகிறார்.

அந்த வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற பொது



தொகுதியின் வேட்பாளராக அக்கட்சியின் பெரம்பலூர் மாவட்ட தலைவர் நல்லறிக்கை ந.கி. இளங்கோவன் என்பவரை அறிவித்துள்ளார்.

வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இளங்கோவன் வருகின்ற 2ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்கிறார். தற்போது தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் தமது ஆதரவாளர்களுடன் பிரச்சாரம் செய்துவருகிறார். மேலும் தொகுதியில் தான் சார்ந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் பட்டியல் சமூகத்தை சார்ந்தவர்களுடன் நெருக்கமாக இருக்கும் தான், வெற்றி பெற்றால் குன்னம் தொகுதியை வளர்ச்சி பாதைக்கு கொண்டு வருவதற்கு பாடுபடுவேன் என்கிறார்.


# ஹோர்முஸ் நீரிணையை திறக்க ஈரானுக்கு அமெரிக்கா 48 மணி நேர கெடு;

ஹோர்முஸ் நீரிணையை 48 மணி நேரத்துக்குள் திறக்காவிடில் ஈரானின் மின்னுற்பத்தி நிலையங்களை அழித்துவிடுவோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கெடு விதித்து ள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் நடத்திவரும் தாக்குதலுக்குப் பதிலடியாக உலகின் கச்சா எண்ணெய் போக்குவரத்துக்கு அதிகம் பயன்படுத்தப்படும் கடல் பகுதிகளில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது. இதனால் அந்த வழியே கச்சா எண்ணெய் கப்பல்கள் செல்வதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும், நட்பு நாடான சீனா உள்ளிட்ட சில நாடுகளின் கப்பல்கள் மட்டும் ஹோர்முஸ் நீரிணை வழியே செல்ல ஈரான் அனுமதியளித்துள்ளது. இந்திய கச்சா எண்ணெய்க் கப்பல்களும் ஹோர்முஸ் நீரிணை வழியே செல்ல ஈரான் அனுமதித்துள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல், ஐரோப்பிய நாடுகளின் கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியே செல்ல ஈரான் தடை விதித்து ள்ளது.

இதன் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. சில நாடுகளில் பெட்ரோல், டீசல் விலை உச்சம் தொட்டுள்ளது. இதையடுத்து, ஈரான் மீதான தாக்குதலைக் கைவிட பரிசீலனை செய்து வருவதாக டிரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்நிலையில், திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு ஈரானுக்கு டிரம்ப் கெடு விதித்துள்ளார். இதுகுறித்து அவர்தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'ஹோர்முஸ் நீரிணையை கப்பல் போக்குவரத்துக்கு 48 மணி நேரத்துக்குள் ஈரான் முழுவதும் திறக்க வேண்டும்.

இல்லையேல் ஈரானிலுள்ள மின்னுற்பத்தி நிலையங்கள் அனைத்தையும் அமெரிக்கா அழித்துவிடும். அதில் முதல் தாக்குதலே ஈரானில் உள்ள மிக ப்பெரிய மின்னுற்பத்தி நிலையமாகத்தான் இருக்கும்' எனத் தெரிவித்துள்ளார்.



ஈரானிலுள்ள எந்த மிகப்பெரிய மின்னுற்பத்தி நிலையம் மீது தாக்குதல் நடத்தப்படும் என்ற தகவலை டிரம்ப் வெளியிடவில்லை. அதேநேரத்தில் ஈரானில் உள்ள மின்னுற்பத்தி நிலையங்களில் மிகப்பெரியது, புஷைரில் உள்ள அணுசக்தி மின்னுற்பத்தி நிலையம்தான். அதன் மீது ஏற்கெனவே கடந்த வாரம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஒருவேளை டிரம்ப் அந்த இடம் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்போகிறோம் என்பதைத்தான் குறிப்பிட்டாரா அல்லது டெஹ்ரான் அருகே உள்ள இயற்கை எரிவாயு மையம் மீது தாக்குதல் நடத்துவோம் எனத் தெரிவித்தாரா என்பது தெரியவில்லை.

ஹோர்முஸ் முழுமையாக மூடப்படும்ஈரான்: டிரம்ப் கெடு விதித்திருப்ப தற்கு ஈரானும் பதிலடி கொடுத்துள்ளது. இதுதொடர்பாக ஈரானின் ராணுவ செய்தித் தொடர்பாளர் ஞாயிற்றுக்கிழமை கூறுகையில், 'ஈரானில் உள்ள மின்னுற்பத்தி மையங்கள் மீது தாக்குதல்கள் எதுவும் நடத்தப்படுமானால்,

பதிலுக்கு இந்த பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்புகள் மீது ஈரானும் தாக்குதல் நடத்தும்' என்றார்.

சர்வதேச கப்பல் போக்குவரத்து அமைப்புக்கான ஈரானின் நிரந்தர பிரதிநிதி சையது அலி மொளசாவி கூறுகையில், 'எதிரி நாடுகளின் கப்பல்கள் தவிர மற்ற நாடுகளின் கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணையில் அனுமதிக்கப்படும்.

அது எந்தெந்த நாடுகளின் கப்பல்கள் என்பதை ஈரான் முடிவு செய்யும்' என்றார். மின்னுற்பத்தி மையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், பகுதியளவு மூடப்பட்டுள்ள ஹோர்முஸ் நீரிணை உடனடியாக முழுமையாக மூடப்படும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது.

### திருச்சி மாவட்டத்தில்

# வாக்கு எண்ணும் மையங்கள் அறிவிப்பு



திருச்சி, மார்ச். 23

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் சரவணன் அறிவித்துள்ளார். திருச்சி கிழக்கு, மேற்கு, திருவெறும்பூர், மணப்பாறை, ஸ்ரீரங்கம் தொகுதிகளுக்கு டிவிஎஸ் டோல்கேட் ஜமால் முகமது கல்லூரியிலும், முசிறி, துறையூர், மண்ணச்சநல்லூர், லால்குடி தொகுதிகளுக்கு புலிவலம் ஒயாசிஸ் கல்லூரியிலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் திருச்சி மாவட்டம் துறையூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்கு பெட்டிகள் துறையூர் நகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பான அறையில் வைக்கப்பட உள்ளன. அந்த அறையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பணிகளை திருச்சி மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான சரவணன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வில் துணை தேர்தல் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# ஆற்றோரத்தில் ஒரு அத்திமரம் நூல் வெளியீட்டு விழா



கோவை மார்ச்:23

கோவை மாவட்டம் ராமநாதபுரம் ஒலம்பஸ் பகுதியில் தமிழ்நாடு இலக்கியப் பேரவை சார்பாக கவிஞர் பொன்சிங் அவர்களின் ஆற்றோரத்தில் ஒரு அத்திமரம் நூல் வெளியிடப்பட்டது.விழாவிற்கு புலவர் பொன்முடி சுப்பையன் தலைமை தாங்கினார்.திராவிட மணி வரவேற்புரை ஆற்றினார்.

புத்தகத்தை பாரதியார் பல்கலைக் கழக மேனாள் துணை இயக்குனர் சி.சித்ரா நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.முதல் பிரதியை விஜய் சண்முகம் பெற்றுக் கொண்டார். செ.துரைமுருகன். நூலைப்பற்றி ஆய்வுரையாற்றினார்.கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையின் செயலர் தம்பிதுரை கவிஞர் பொன்சிங்காரம் அவர்களின் இலக்கியச் சேவையைப்பாராட்டி உரை நிகழ்த்தினார்.கவிஞர் பொன்சிங்காரம் ஏற்புரையாற்றினார்.சா.குமாரசாமி நன்றி உரையாற்றினார். இது குறித்து பொன் சிங்காரம் கூறுகையில் இப்புத்தகத்தில் அழகான காதல் இடம் பெற்றுள்ளது என்பதை குறிப்பிட்டார்.

### ஊழலை ஒழிப்போம் சினிமா தலைமை தவிர்ப்போம்

# ஜல்லிக்கட்டு மக்கள் கட்சி தேர்தல் வாக்குறுதி



சென்னை, மார்ச் 23,

ஜல்லிக்கட்டு மக்கள் கட்சி சார்பில் சென்னை மாவட்ட கலந்தாய்வு கூட்டம் கட்சியின் தலைவர் ராமராஜன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளரை சந்தித்த கட்சியின் தலைவர் ராமராஜன் கூறியதாவது:

தமிழகத்தில் ஊழலற்ற ஆட்சியும் சினிமா தலைமை தவிர்த்து மக்கள் சக்தி வாய்ந்த ஒரு அரசியல் களத்தை முன்னெடுக்க வேண்டி நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் ஜல்லிக்கட்டு மக்கள் கட்சி 234 தொகுதிகளிலும் தேர்தலை சந்திக்க தயாராக உள்ளதாகவும் அதே நேரத்தில் திராவிட முன்னேற்ற கழகம் ஆதரவு கேட்டிருக்கும் நிலையில் தங்களுடைய கட்சி சார்பில் இரண்டு தொகுதிகள் கேட்டுள்ளதாகவும், தொகுதி உடன்பாடு ஏற்படவில்லை யெனில் தனித்து போட்டியிடும் என்று தெரிவித்தார்.

எங்கள் கட்சியினுடைய முக்கிய நோக்கம் அனைவருக்கும் கல்வி மருத்துவம் வேலை வாய்ப்புகளுக்கு முன்னுரிமை, தூய்மையான அரசியலை முன்னெடுப்பதே ஜல்லிக்கட்டு மக்கள் கட்சியின் முக்கிய நோக்கம் என தெரிவித்தார்.

மேலும் இந்த கலந்தாய்வு கூட்டத்தில் மாநில மாவட்ட மகளிர் அணி தலைவி மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### மார்ட்டின் குழுமத்தின் சார்பாக

# எஸ் எம் கிரீன் கார்டன் வீட்டு மனை திறப்பு விழா



கோவை மார்ச்:23

கோவை மாவட்டம் வடவள்ளி சாலை வீரகேரளம் பகுதியில் மார்ட்டின் குழுமத்தின் சார்பாக எஸ் எம் கிரீன் கார்டன் வீட்டுமனை திறப்பு விழா மார்ட்டின் குழுமத்தின் நிறுவனர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பார்வையிட்டார்.இந்த வீட்டு மனையில் சிறுவர்கள் விளையாட்டு மைதானம்,பூங்கா,சுற்றிலும் மரங்கள் சோலார் விளக்குகளுடன் பசுமை நிறைந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ள இம்மனைகளை அனைவரும் பெற்று பயன்பெற வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொண்டனர்.

### கீரிப்பாறை அருகே

# வடமாநில தொழிலாளி கொலை 4 பேரை பிடித்து போலீஸ் விசாரணை

பூதப்பாண்டி, மார்ச். 23

கீரிப்பாறை அருகே காளி கேசத்திலிருந்து மணலோடை செல்லும் சாலையில் குலசேகரத்தை சேர்ந்த ரூபன் என்பவருக்கு சொந்தமான அன்னாசிப்பழத் தோட்டம் உள்ளது. இந்த தோட்டத்தில் ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த அருண்குமார் சிங் (31) என்பவர் தங்கி இருந்து தொழிலாளியாக வேலை செய்து வந்தார். இவருடன் வேறு சில வட மாநில தொழிலாளர்களும் தங்கி இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை அன்னாசிப்பழத் தோட்டம் அருகே அருண்குமார் சிங் உடலில் பலத்த காயங்களுடன் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இதனை பார்த்த அந்தப் பகுதி வழியாக சென்றவர்கள் கீரிப்பாறை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் விரைந்து சென்று உடலை பார்வையிட்டு விசாரணை நடத்தினர். அருண்குமார் எதற்காக கொலை செய்யப்பட்டார்? என்ற காரணம் உடனடியாக தெரியவில்லை.

இதையடுத்து போலீசார் அருண்குமார் சிங்கின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தை போலீசார் கொலை வழக்காக பதிவு செய்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். கொலை தொடர்பாக அருண்குமார் சிங்குடன் வேலை பார்த்த 4 வட மாநில தொழிலாளிகளை சந்தேகத்தின் பேரில் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

### புதுக்கடை அருகே

# 2 விபத்துகள் நடந்து சென்ற முதியவர்கள் படுகாயம்

புதுக்கடை, மார்ச். 23

புதுக்கடை அடுத்த அனந்தமங்கலம் பகுதியை சேர்ந்தவர் செல்லையன் (82). இவர் நேற்று அந்த பகுதியில் உள்ள சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென சாலையை கடக்க முயன்ற போது, தேங்காப்பட்டணம் புதுக்கடை சாலையில் அதிவேகமாக ஓட்டி வந்த பைக் ஒன்று செல்லையன் மீது மோதியதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இந்த சம்பவம் தொடர்பாக பைக்கை ஓட்டி வந்த அபின்ராஜ் (20 ) என்பவர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

புதுக்கடை அருகே முக்காடு பகுதியை சேர்ந்தவர் பால்மணி (57) இவர் சம்பவ தினம் புதுக்கடை தேங்காப்பட்டணம் சாலையில் நடந்து பைங்குளம் பகுதிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் பின்னால் சிவப்பு நிற கார் ஒன்று அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. திடீரென நடந்த சென்ற பால்மணியின் மீது கார் மோதி, அவரது கால் பாதத்தில் கார் ஏறி இறங்கி காயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் வாகனத்தை நிறுத்தாமல் அந்த வாகனம் அங்கிருந்து சென்று விட்டது.

காயமடைந்த பால்மணி மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் வழக்கு பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய கார் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தூத்துக்குடியிலிருந்து

# திருநெல்வேலி நோக்கிச் சென்ற கொண்டிருந்த அரசுப் பேருந்து



தூத்துக்குடி, மார்ச். 23

தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி நோக்கிச் சென்ற கொண்டிருந்த அரசுப் பேருந்து, வாகைகுளம் அருகே வரும் திடீரென தீப்பிடித்து எரிந்து முற்றிலும் சேதமடைந்தது.

ஓட்டுநரின் சாமர்த்தியத்தால் பேருந்தில் இருந்த 60க்கும் மேற்பட்ட பயணிகள் காயமின்றி உயிர் தப்பினர். தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்திலிருந்து நேற்று இரவு அரசுப் பேருந்து ஒன்று 60க்கும் மேற்பட்ட பயணிகளுடன் திருநெல்வேலி நோக்கிப் புறப்பட்டது. பேருந்து வாகைகுளம் அருகே சென்று கொண்டிருந்தபோது, அதன்டீசல்டேங்க்(எண்ணெய் தொட்டி) பகுதியில் திடீரென தீப்பொறி ஏற்பட்டுப் புகை கிளம்பியது. இதனைப் கவனித்த ஓட்டுநர், உடனடியாகப் பேருந்தைச் சாலையோரம் நிறுத்திப் பயணிகளை இறங்குமாறு எச்சரித்தார். பயணிகள் அனைவரும் பதற்றத்துடன் கீழே இறங்கிய சில நிமிடங்களிலேயே தீ பேருந்து முழுவதும் பரவித் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பயணிகள் அனைவரும் முன்கூட்டியே இறங்கியதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், நீண்ட நேரம் போராடித் தீயை அணைத்தனர். இருப்பினும் பேருந்து முற்றிலும் எரிந்து எலும்புக்கூடாகக் காட்சியளித்தது. இச்சம்பவம் குறித்துப் புதுக்கோட்டை போலீசார் வழக்குப் பதிவு செய்து, இயந்திரக் கோளாறு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்துத் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

### விக்டோரியா வாரச்சந்தை ஆக்கிரமிப்பை கண்டித்து

# கறுப்பு கொடி கட்டி சட்டமன்றத் தேர்தல் புறக்கணிக்க போவதாக கிராம மக்கள்



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒரப்பம் கிராமத்தில் கிராம நத்தமான சுமார் 1 ஏக்கர் நிலத்தில் சுமார் சுமார் 150 ஆண்டுகள் பழமைவாய்ந்த விக்டோரியா வாரச்சந்தை செயல்பட்டு வந்தது. இந்த வாரச்சந்தையில் வாரம்தோறும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் விளைப்பொருள்களை கொண்டுவந்து விற்பனை செய்து வந்தனர்.

இந்த நிலையில் சிலர் இந்த சந்தையை வருவாய் துறையினரின் மூலமாக நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வார்ச்சந்தையை இருப்பு முள்வேலி அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஒரப்பம் கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாகமேலாக இயங்கி வந்தவிக்டோரியாசந்தைஆக்கிரமிப்பை அகற்றி மீண்டும் வாரச்சந்தையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

ஆனால் இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள்யாரும் எந்த நடவடிக்கை எடுக்காததால் ஆத்திரமடைந்த கிரம மக்கள்வருகின்ற சட்ட மன்ற தேர்தலை புறக்கணித்து சாலை ஓரங்களில் பேனர்கள் வைத்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு கறுப்பு கொடிகட்டியும் தங்களது எதிப்பை தெரிவித்துள்ளனர். மேலும் கிராம நிவாக அலுவலகம் முன்பாகவும் கறுப்பு கொடிகளையும் கட்டி வருகின்ற சட்ட மன்றத் தேர்தலை புறக்கணித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரப்பரப்பினை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து கிராம மக்கள் கூறுகையில் ஆங்கிலேயர்ஆட்சிக்காலத்தில்இருந்தே கிராம நத்தம் நிலத்தில் இயங்கி வந்த விக்டோரியவாரச்சந்தையை சிலர் வருவாய் துறையினர்கள் உதவிகளுடன் சுமார் ஒரு ஏக்கர் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து முள்வேலிகள் அமைத்து உள்ளதால் வாரச்சந்தை நடத்த முடியாத நிலை உள்ளது. ஆகையால் கடந்த 150 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த விக்டோரியா வாரச்சந்தையை மீட்டு மீண்டும் வாரச்சந்தை செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணிக்க உள்ளதாகவும், வாக்கு சேகரிக்க யாரையும் கிராமத்திற்குள் அனுமதிக்க மாட்டோம் என்று நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் அடுத்தகட்டமாக வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அடையாள அட்டைகளையும் அரசிடம் ஒப்படைக்க போவதாகவும் அந்த கிராம மக்கள் தெரிவித்தனர்.

# திருச்சி பாகமுகவர்கள் கூட்டம்

## அமைச்சர் மகேஷ் பங்கேற்பு



திருச்சி, மார்ச். 23

திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் திமுக பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஏப்ரல் 21ஆம் தேதிக்குள் பிரச்சாரத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்றும், பாக முகவர்கள் எவ்வாறு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். மேலும், முதல்வர் ஸ்டாலின் கை காட்டும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# பேராசிரியர் எம். விஸ்வநாதன் டயாபடீஸ் ரிசர்ச் சென்டர் சார்பாக தங்கப்பதக்கம் வழங்கும் நிகழ்ச்சி



சென்னை, மார்ச் 23,

சென்னையில் எம்.வி. டயாபடீஸ் மற்றும் பேராசிரியர் எம். விஸ்வநாதன் டயாபடீஸ் ரிசர்ச் சென்டர் இணைந்து 40 வது "பேராசிரியர் எம் .விஸ்வநாதன் தங்கப்பதக்கம் விருது " வழங்கும்நிகழ்ச்சிநடைபெற்றது.

ஏ.வி.ஏ குழுமத்தின் மேலாண்மை இயக்குனர் டாக்டர் ஏ.வி .அனுப் இந்த வருடத்திற்கான எம். வி.வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது

ஆயுர்வேதம் மூலிகை மற்றும் உணவுப் பொருட்கள் துறையில் செயல்படும் இவர் ஆயுர்வேதம் மற்றும் நவீன மருத்துவத்தை இணைத்து பணியாற்றியுள்ளார். நீரிழிவு மருத்துவத்தில் ஆயுர்வேதத்தின் பங்கு முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார்.

புதுச்சேரி மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவரும் எமரிடஸ் பேராசிரியரான டாக்டர் அசோக்குமார்தாஸ் இந்த 40 ஆம் ஆண்டிற்கான தங்கப்பதக்கம் உரையை வழங்கி, அரசு மற்றும் நீரிழிவு தொடர்பான தனது கருத்துக்களையும் சிறப்பான முறையில் பகிர்ந்தார்.

இந்நிகழ்வில் சென்னையில் உள்ள சி.எஃப்.டி.ஐ இயக்குனர் கே. முரளி தலைமை விருந்தினராக கலந்து கொண்டார் .

எம். வி. டயாபடீஸ் தலைமை மருத்துவரான டாக்டர் விஜய் விஸ்வநாதன் நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட " டயாபடீக் காலணிகள் " புத்தகத்தைப் பற்றி விவரித்து பேசினார். இந்நிகழ்வில் டாக்டர் விஜய் விஸ்வநாதன் இந்த உரை மற்றும் புத்தக வெளியீடு நிகழ்வானது இந்தியாவில் நீரிழிவு சிகிச்சை குறித்து விழிப்புணர்வு முக்கியத்துவத்தை அதிகரிக்கும் என தெரிவித்தார்.

அரசு மருத்துவ நிர்வாக கட்டமைப்புகளும் மற்றும் பொது பொதுமக்களும் இணைந்து செயல்பட்டால் தான் இந்தியாவில் நீரிழிவு பிரச்சினையை கட்டுப்படுத்த முடியும் என்று மேலும் அவர் கூறினார்.



வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026- ஐ முன்னிட்டு, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், கொடுவேரி அணைக்கட்டில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தும் விதமாக செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து சுற்றுலா பயணிகள் உட்பட அனைத்து வாக்காளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066